tnkalvi.online

No. of Printed Pages : **5**

5161

பதிவு எண்

Part III — Vocational Subjects
(Agricultural Area)
வேளாண் அறிவியல்
AGRICULTURAL SCIENCE

(தமிழ் வழி / Tamil Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்பது _____ வாக்கு ஆகும்.

(அ) ஔவையார் (ஆ) திருவள்ளுவர்

(இ) வள்ளலார் (ஈ) தொல்காப்பியர்

2. முகலாயர் காலத்தில் _____ என்பவரால் விரிவான நில நிர்வாக முறை ஏற்படுத்தப்பட்டது.

(அ) பாபர் (ஆ) தோடர்மால் (இ) அக்பர் (ஈ) கோபர் நிக்கஸ்

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-september-2021-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

3. பட்டம் மற்றும் பட்டத்திற்கேற்ற பயிரைத் தேர்ந்தெடுக்க உதவும் வானிலை முன்னறிவிப்பு _____.

(அ) மத்திய கால முன்னறிவிப்பு (ஆ) நீண்ட கால முன்னறிவிப்பு

(இ) நிகழ்கால முன்னறிவிப்பு (ஈ) குறுகிய கால முன்னறிவிப்பு

4. தாவர வேர் வளர்ச்சியைப் பாதிக்கும் நச்சுத் தனிமங்கள் _____.

(அ) மெக்னீசியம், தாமிரம் (ஆ) நிக்கல், காரீயம்

(இ) மாலிப்டினம், மாங்கனீசு (ஈ) இரும்பு, கால்சியம்

5. தாவரங்களால் பயன்படுத்தப்படும் நிலநீர் வகை _____.

(அ) உறிஞ்சு நீர் (ஆ) புவியீர்ப்புவிசை நீர்

(இ) நுண்புழைநீர் (ஈ) அனைத்தும்

6. வாசனைப் பயிர்களின் ராணி _____.

(அ) மிளகு (ஆ) ஏலக்காய் (இ) மஞ்சள் (ஈ) ஜாதிக்காய்

7. மழை மூலம் பெறப்பட்ட நிலத்தடி நீரைப் பயன்படுத்தி செய்யப்படும் சாகுபடி :

(அ) மானாவாரி சாகுபடி (ஆ) புன்செய் சாகுபடி

(இ) நன்செய் சாகுபடி (ஈ) இவற்றில் எதுவுமில்லை

8. வயலில் முதல் உழவு செய்ய கால்நடைகளைக் கொண்டு இயக்கப்படும் கருவி _____.

(அ) உளிக்கலப்பை (ஆ) நாட்டுக் கலப்பை

(இ) திருப்புக் கலப்பை (ஈ) சட்டிக் கலப்பை

9. ஏற்ற சூழல் இருந்தும் விதைகள் முளைக்காத ஓய்வு நிலை _____.

(அ) விதை கடினப்படுத்துதல் (ஆ) விதை நேர்த்தி

(இ) விதை உறக்கம் (ஈ) இவை அனைத்தும்

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-september-2021-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

10. வறட்சியைத் தாங்க விதை நேர்த்திக்கு பயன்படும் இரசாயனம் _____ .

(அ) $MnSO_4$ (ஆ) $KMnO_4$ (இ) $CaSO_4$ (ஈ) KCl

11. நேரடி உரத்திற்கு ஒரு உதாரணம் _____ .

(அ) திரவ உயிர் உரங்கள்

(ஆ) யூரியா

(இ) டை அமோனியம் பாஸ்பேட்

(ஈ) யூரியா + டை அமோனியம் பாஸ்பேட்

12. குறை உருமாற்றம் _____ இல் காணப்படுகிறது.

(அ) வெட்டுக்கிளி (ஆ) வண்டு

(இ) தேனீ (ஈ) வண்ணத்துப்பூச்சி

13. பாலைத் தயிராக்க உதவும் நுண்ணுயிரி _____.

(அ) சக்கரோமைசிஸ் (ஆ) ஈஸ்ட்

(இ) அஸ்பர்ஜில்லஸ் (ஈ) லேக்டோபேசில்லஸ்

14. அயல்நாட்டு இனங்களுள் குறிப்பிடத்தக்க கறவை மாட்டினம் _____ .

(அ) ஜெர்சி (ஆ) உம்பளாச்சேரி

(இ) தார்பார்க்கர் (ஈ) சிந்தி

15. வண்ணமீன்கள் வளர்ப்பில் வளர்க்கப்படும் முட்டையிடும் மீன் _____ .

(அ) கத்திவால் (ஆ) தங்க மீன்

(இ) பிளாட்டி (ஈ) மத்தி மீன்

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-september-2021-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி – II

குறிப்பு : எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். **28**-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

16. பசுமைப் புரட்சி என்றால் என்ன ?

17. வானிலை முன்னறிவிப்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை ?

18. மண் அரிமானம் என்றால் என்ன? மண் அரிமானம் ஏற்படக் காரணங்கள் யாவை ?

19. தீவனப் பயிர்கள் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

20. பயிர் சுழற்சி - சிறு குறிப்பு வரைக.

21. நாட்டுக் கலப்பையின் அமைப்பு பற்றி விவரிக்கவும்.

22. விதை நேர்த்திக்கான முன்னெச்சரிக்கைகள் யாவை ?

23. நீர் ஆதாரங்கள் யாவை? அவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி எழுதுக.

24. உரங்களின் நிலையைப் பொருத்து, எண்ணிக்கையைப் பொருத்து எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

25. ஒருங்கிணைந்த களை கட்டுப்பாடு என்றால் என்ன ?

26. பயிர் முதிர்ச்சியை எவ்வாறு கண்டறியலாம் ?

27. கடன் தேவைகளின் வகைகள் யாவை ?

28. கால்நடை உற்பத்தியை எவ்வாறு அதிகரிக்கலாம் ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-september-2021-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - III

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். **35**-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

29. மண் மற்றும் உயிரியல் காரணிகள் பயிர் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றன ?

30. உவர் மண், களர் மண் - வேறுபடுத்துக.

31. ஊட்டச்சத்து பயன்படு திறனை அதிகரிப்பதால் ஏற்படும் நன்மைகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

32. களைகளால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ? ஏதேனும் ஐந்தினை மட்டும் எழுதுக.

33. கால்நடைகளில் களை எடுத்தல் என்றால் என்ன? அதன் நோக்கம் யாது ?

34. நன்னீர் மற்றும் குளிர்நீர் மீன் வளர்ப்பினை விவரிக்கவும்.

35. உரப்பயிர்களைப் பற்றி நீ அறிந்தவற்றை வகைப்படுத்தி எழுதுக.

பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x10=20**

36. (அ) வேளாண் வளர்ச்சித் திட்டங்களால் ஏற்படுத்தப்பட்ட சாதனைகளைப் பட்டியலிடுக.

அல்லது

(ஆ) சாகுபடி முறைகளை விளக்குக.

37. (அ) நீர்ப்பாசன முறைகள் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு முறைகளை நிறை மற்றும் குறைகளுடன் விளக்குக.

அல்லது

(ஆ) (i) மதிப்பூட்டப்பட்ட மீன் உணவுகளை எழுதுக.

(ii) மீன்களின் பொருளாதார முக்கியத்துவம் பற்றி எழுதுக.

- o O o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-september-2021-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online